# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.79/2023 நாள் : 05.10.2023**

## வடகிழக்குப் பருவமழையை முன்னிட்டு மேற்கொள்ள வேண்டிய அனைத்து முன்னேற்பாடு பணிகளும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு தயார் நிலையில் இருக்க வேண்டும்

## சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், இ.ஆ.ப. அவர்கள் அறிவுறுத்தல்

வடகிழக்குப் பருவமழையை முன்னிட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய அனைத்து முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் இன்று (05.10.2023) சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய தலைமை அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்றது.

**இவ்வாய்வுக் கூட்டத்தில் மேலாண்மை இயக்குநர் அவர்கள் தெரிவித்ததாவது:-**

சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் வடகிழக்குப் பருவமழையை முன்னிட்டு பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனடிப்படையில், தற்போது, பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுவரும் குடிநீரின் தரத்தை உறுதிசெய்வதற்காக நாளொன்றுக்கு 300 குடிநீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு குடிநீரின் தரம் ஆய்வகம் மூலம் பரிசோதிக்கப்படுகிறது.

வடகிழக்கு பருவமழை காலங்களில் குடிநீரின் மாதிரி சேகரிப்பு 600 ஆக அதிகரிக்கப்பட வேண்டும். குடிநீரில் குளோரின் அளவு மற்றும் அதில் கலந்துள்ள திடப்பொருள்களின் அளவை (Total Disolved Solid) பரிசோதிக்க, நாளொன்றுக்கு 2000 மாதிரிகள் என்பதை 3000 மாதிரிகளாக அதிகரிக்கப்பட்டு களப்பணியாளர்களால் பரிசோதிக்கப்பட வேண்டும். குறிப்பாக குடிநீரின் தரம் குறித்து பொதுமக்களிடமிருந்து குறைகள் தெரிவிக்கப்படும்போது சம்பந்தப்பட்ட பகுதிகளில் அதிக அளவில் குடிநீர் மாதிரிகள் எடுக்கப்பட வேண்டும். மேலும், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் குடியிருப்பு பகுதிகளுக்கு வழங்கப்படும் குடிநீரின் தரத்தினை ஆய்வு செய்வதற்காக தினந்தோறும் குடிநீர் மாதிரிகள் சேகரிக்கப்பட வேண்டும்.

குடிநீர் விநியோக நிலையங்களுக்குத் தேவையான பிளீச்சிங்பவுடர், படிகாரம், சுண்ணாம்பு போன்ற இரசாயன பொருட்கள் தேவையான அளவு இருப்பு வைக்கப்பட வேண்டும். மழைக்காலங்களில் குடிநீர் விநியோக நிலையங்களில்(WDS) தேங்கும் மழைநீரினை இறைக்க பெரிய நீர் உறிஞ்சும் இயந்திரங்கள் மற்றும் சிறிய நீர் உறிஞ்சும் இயந்திரங்கள் குடிநீர் விநியோக நிலையங்களில் தயார் நிலையில் வைக்கப்பட வேண்டும். அனைத்து குடிநீர் சுத்திகரிப்பு மற்றும் விநியோக நிலையங்களிலும் உள்ள இயந்திரங்கள் மற்றும் ஜெனரேட்டர்கள் நல்ல முறையில் பராமரிக்கப்பட வேண்டும். ஜெனரேட்டர்களுக்குத் தேவையான எரிபொருள்கள் இருப்பில் வைத்திருக்கப்பட வேண்டும்.

குடிநீர் விநியோக நிலையங்களிலும், கழிவு நீரிறைக்கும் நிலையங்களிலும் மணல் மூட்டைகள் பாதுகாப்பு காரணங்களுக்காக தயார் நிலையில் வைக்கப்பட வேண்டும். கழிவுநீர் அடைப்பு ஏற்படும் இடங்கள் கண்டறியப்பட்டு, தூர்வாரும் இயந்திரங்கள், பெரிய ஜெட்ராடிங் இயந்திரங்கள் மற்றும் சிறிய ஜெட்ராடிங் இயந்திரங்கள், ஜெட்டிங் மற்றும் உறிஞ்சும் இயந்திரங்கள் மற்றும் கழிவுநீர் உறிஞ்சும் இயந்திரங்கள் என மொத்தமுள்ள 537 இயந்திரங்களும் தயார் நிலையில் வைக்கப்பட வேண்டும். மேலும், மழைக்காலங்களில் கழிவுநீர் அடைப்பு, கழிவுநீர் தேக்கம் மற்றும் மழைநீர் அகற்றும் பணிகளை சீர் செய்யும் வகையில் அனைத்து களப்பணியாளர்களும் 24 மணி நேரமும் பணிகளில் ஈடுபடுத்தப்பட வேண்டும்.

பெருநகர சென்னை மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் குடிநீர் / பாதாள சாக்கடை திட்டப் பணிகள் நடைபெறும் இடங்களில் உரிய அறிவிப்பு பலகைகள், பாதுகாப்பு தடுப்புகள் அமைப்பது பொதுமக்களுக்கு இடையூறு இல்லாத வகையில் திட்டப் பணிகளை மேற்கொள்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டும். மேலும், கடந்த மே மாதம் முதல் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ள கழிவுநீர் குழாய்களில் மீண்டும் அடைப்பு ஏற்படாத வண்ணம் தொடர் கண்காணிப்புப் பணிகளை உறுதி செய்ய வேண்டும். அனைத்து களப்பணியாளர்களும் சம்பந்தப்பட்ட பகுதிகளில் தயார் நிலையில் இருக்க வேண்டும். பொதுமக்களிடமிருந்து

தொலைபேசி மூலமாகவோ, நேரிடையாகவோ அல்லது சமூக ஊடகங்கள் மூலம் பெறக்கூடிய குறைகளை உடனுக்குடன் நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், தலைமைப் பொறியாளர் திரு.ஆர்.சிவமுருகன், கண்காணிப்புப் பொறியாளர்கள் திரு.எ.இராதாகிருஷ்ணன், திரு.எஸ்.இரவீந்திரநாதன் மற்றும் அனைத்துப் பகுதிப் பொறியாளர்கள் உள்பட பல்வேறு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவு நீரகற்று வாரியம்